**செய்தி வெளியீடு எண்: 743** **நாள்: 16.10.2018**

<u>செய்தி வெளியீடு</u>

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபங்களில் அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், 2017–18ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையின்போது, தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அமைந்துள்ள அமுதகவி உமறுப்புலவர் அவர்களின் மணிமண்டபத்தில், உமறுப்புலவர் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 23 அன்று மாவட்ட அளவில் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

உமறுப்புலவர் அவர்களின் பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தமைக்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை 15.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உமறுப்புலவர் வாரிசுகள் இலக்கிய அறக்கட்டளையின் தலைவர் திரு.எச். ருமைசுதீன் ஃபைஸி, செயலாளர் திரு.மு. உமர்கத்தாபு, இணைச் செயலாளர் முனைவர் மோ. பாட்டழகன், கௌரவ ஆலோசகர் திரு.கே. பீர்முகம்மது, உமறுப்புலவர் சங்கத்தின் தலைவர் திரு.உ. காஜாமைதீன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். மேலும், ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய பெருமக்களுக்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்கியமைக்காவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, இஸ்லாமிய பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் உடனிருந்தார்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.10.2018**